# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.224** **நாள் : 20.08.2025**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், சைதாப்பேட்டை தாதண்டர் நகர் அருகில் உள்ள மாம்பலம் கால்வாயில் நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிக்காக ரூபாய் 7.43 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்களை இன்று பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.**

**இதனைத் தொடர்ந்து, அண்ணா நகர் கிழக்கு பிளாக, எச்.1 மூன்றாவது அவென்யூவில், ரூபாய் 62 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் ( TNUIFSL) புதிய அலுவலகக் கட்டடத்தினை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இன்று (20.08.2025) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், சைதாப்பேட்டை தாதண்டர் நகர் அருகில் உள்ள மாம்பலம் கால்வாயில் நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிக்காக ரூபாய் 7.43 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புகளை தடுக்கும் வகையில், நீர்வழிக்கால்வாய்களில் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியால் 81 கி.மீ. நீளம் கொண்ட 44 நீர்வழிக்கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பருவமழைக்காலங்களில் இந்த நீர்வழிக்கால்வாய்களில் மழைநீர் சீராகச் செல்லும் வகையில், 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் சுழற்சி முறையில் தூர்வாரும் பணி மற்றும் மிதக்கும் கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் பெரிய மற்றும் சிறிய வகையிலான கால்வாய், குளம் மற்றும் ஏரி ஆகிய நீர்நிலைகளில் படிந்துள்ள சேறு, சகதி, மிதக்கும் தாவரங்கள். கழிவுப் பொருட்கள் மற்றும் பிற மிதக்கும் பொருட்களை அகற்றி சுத்தப்படுத்துவதற்கு புதிதாக மூன்று ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் (Amphibious Excavator Equipment) இயந்திரங்களை ரூ.7.43 கோடி மதிப்பீட்டில் (ஒன்றின் விலை ரூ.2,47,55,220/-) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் முறையாக இவ்வகை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சமானது இந்த உபகரணம் நீரிலும், நிலத்திலும் இயங்கக் கூடியதாகும்.

இந்த உபகரணங்கள் நீர்நிலைகளில் தூர்வாருவது மட்டும் அல்லாமல் நிலப்பரப்பில் பள்ளம் தோண்டுதல் உள்ளிட்ட நிலத்தைச் சீரமைக்கும் பல்வேறு பணிகளையும் மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, அண்ணா நகர் கிழக்கு பிளாக, எச்.1 மூன்றாவது அவென்யூவில், ரூபாய் 62 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் ( TNUIFSL) புதிய அலுவலகக் கட்டடத்தினை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இக்கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து ரூபாய் 62 கோடியில் வாங்கப்பட்டுள்ளது 35400 சதுர அடிகள் பரப்பளவில் தரைத் தளம் மற்றும் நான்கு தளங்களுடன் இக்கட்டடம் அமைந்துள்ளது.

தரைத் தளத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம், முதல் தளத்தில் நான் முதல்வன் அலுவலகம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் அலுவலகம், நான்காம் தளத்தில் சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனம் லிமிடெட் அலுவலகம் அமைந்துள்ளன.

இந்நிகழ்வில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கே. மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர், திரு.ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர், திரு.ஹனிஷ் சாப்ரா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், மரு. ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர், திரு.பி.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர், திரு. எம்.பிரதீப் குமார், இ.ஆ.ப., துணை ஆணையர்கள் திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), திரு. எச். ஆர். கௌஷிக் குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. ராமலிங்கம், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் திரு. ஆர். துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**